**த. நா.ச.பே. எண் : 006** **நாள் : 05.07.2019**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 5.7.2019

---

**உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**1.** விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை உடனடியாக அரவை செய்திட ஏதுவாக, கூடுதலாக நவீன அரிசி ஆலைகளை நிறுவிட வேண்டியது அவசியமாகிறது. எனவே, உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய நவீன இயந்திரங்களைக் கொண்டு **தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன் கூடிய நவீன அரிசி ஆலை சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் நிறுவப்படும்.**

**2.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள சொந்தக் கிடங்குகளின் கொள்ளளவினை அதிகரிக்கவும், எதிர்காலத்தில் உணவு தானியங்களை இருப்பு வைப்பதற்கான தேவையினை கருத்தில் கொண்டும், **கூடுதலாக**

**36,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 28 கிடங்குகள் பல்வேறு இடங்களில் 59.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும்.**

**3.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கல்நார் மேற்கூரைகளுடன் இயங்கி வரும் **(**AC Sheet roof**) 55 கிடங்குகளில்,** மேற்கூரைகளை அகற்றிவிட்டு, நவீன மேற்கூரை அமைப்பான, வண்ணம் தீட்டப்பட்ட ஸ்திர தன்மை அதிகம் கொண்ட **துருப்பிடிக்காத மேற்கூரை அமைக்கும் பணி 21.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

**4.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கிவரும் கிடங்குகளின் வளாகத்தில் உள்ள பழுதடைந்த சாலைகளுக்கு பதிலாக நீண்ட நாள் பயன்படுத்தும் வகையிலும், மழைக் காலங்களில் சேதமடையாத வகையிலும், **54.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும்.**

**5.** தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மூலம் காய்கறிகள், புளி, பழங்கள், பருப்பு வகைகள், பூக்கள் மற்றும் இதர விவசாய பொருட்களை

பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்திட **1,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின் சக்தியுடன் இயங்கக்கூடிய குளிர்சாதனக் கிடங்கு, நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும்.**

## <u>கூட்டுறவுத் துறை</u>

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே!**

**1.** கூட்டுறவு நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளுடன் சிறந்த சேவையினை வழங்குவதற்காக, **113** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 7 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள், 2 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், 2 நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் ஒரு நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம் **ஆக மொத்தம் 125 கூட்டுறவு நிறுவனங்களுக்கு 36.41 கோடி ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.**

**2.** கூட்டுறவு நிறுவனங்கள், வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளுடன் புதுப்பொலிவுடன் சேவை அளிக்க ஏதுவாக, **118** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், **17** மத்தியக் கூட்டுறவு வங்கிகள், **4** நகரக் கூட்டுறவு வங்கிகள், **3** நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் **2** தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஆக மொத்தம் **143 கூட்டுறவு நிறுவனங்கள் 24.91 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.**

**3. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலக கட்டடம்,** மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவை வழங்கிடும் பொருட்டு, **8.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.**

**4.** தரமான நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்கிடவும், பண்டகசாலைகளின் இதர சேவைகளை பொதுமக்கள் மற்றும் நுகர்வோருக்கு அளித்திடவும், அரியலூர், புதுக்கோட்டை, தேனி, கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மண்டலங்களில் **5 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் புதிதாக துவக்கப்படும்.**

**5.** ஒரு புதிய முயற்சியாகவும், நியாய விலைக் கடைகளின் குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையிலும், **மாநிலம் முழுவதும் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் 103 நியாயவிலைக் கடைகளில் திறக்கப்பட்டன.** இவ்வாறு திறக்கப்பட்ட கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

மேலும், அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் அனைத்திலும் மக்களின் அன்றாட தேவையான 300 வகையான பொருட்கள், அதிகபட்ச சில்லறை விலையில் இருந்து

5 சதவீதத்துக்கு குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் மக்களின் வரவேற்பினை பெற்றுள்ளது.

இத்தகைய சீரிய திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தி **582 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள், 5.82 கோடி ரூபாய் செலவில் புதிதாக துவக்கப்படும்.**

**6.** விவசாயிகளின் தேவையை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் **20** மாவட்டங்களில் செயல்பட்டுவரும் **142** தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் **12** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் **100** மெட்ரிக் டன் கொள்ளளவுடைய **135** கிடங்குகளும், **500** மெட்ரிக் டன் கொள்ளளவுடைய **20** கிடங்குகளும், **1,000** மெட்ரிக் டன் கொள்ளளவுடைய **7** கிடங்குகளும், **2,000** மெட்ரிக் டன் கொள்ளளவுடைய **3** கிடங்குகளும் ஆக மொத்தம் **36,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 149 கிடங்குகள் நடப்பாண்டில் 39.37 கோடி ரூபாய் செலவில் புதியதாக கட்டப்படும்.**

## வனத் துறை

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே!**

**1.** மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம் மற்றும் இந்திய வன அளவை நிறுவனம் தெரிவித்துள்ளவாறு வன நிலங்களை புவியளவை வரைபடத்தில் பதிவு செய்ய (Geo-referencing) வலியுறுத்தியுள்ளது. எனவே, வனத் துறையின் கீழ் வரும் வனப் பகுதி முழுவதையும் **வன எல்லைகளை துல்லியமாக புவியிடங்காட்டி** Differential Global Positioning System **மூலமாக வரையறை செய்வதற்கான திட்டப் பணிகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.** 2019–20ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2.** வன விரிவாக்க மையங்களிலிருந்து மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. வன விரிவாக்க மையங்களை வலுப்படுத்தும் வகையில், தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் ஒருங்கிணைந்த கருத்தரங்குகள் வாயிலாக நவீன தொழில்நுட்பத்தை கையாண்டு

சந்தைப்படுத்துவதற்கான வழிமுறைகளை விவசாய பெருமக்களிடம் கொண்டு செல்ல தேவையின் அடிப்படையில் நாற்றங்கால் உற்பத்தி செய்யவும் **கோயம்புத்தூர், நாமக்கல், கரூர், தஞ்சாவூர், காஞ்சிபுரம், தருமபுரி, விருதுநகர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் செயல்பாட்டில் உள்ள 8 வன விரிவாக்க மையங்கள் 2.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும்.**

**3.** புலிகள் காப்பகங்கள் சுற்றுலா பயணிகளுக்கு வன உயிரினங்களை பார்ப்பதற்கும், மலையேற்றம் செய்வதற்கும், வனத்தின் இயற்கையை ரசிப்பதற்கும் அரிய சந்தர்ப்பங்களை வழங்கி வருகிறது. வன உயிரினங்களைப் பற்றியும், வனத்தினுடைய பயன்பாடுகளைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக **களக்காடு–முண்டந்துறை, ஆனைமலை, சத்தியமங்கலம் ஆகிய புலிகள் காப்பகங்களில் கல்வி, ஒலி–ஒளித்தகவல் கருத்து விளக்கக் கூடத்துடன் 3 கலை நயம் மிக்க சிறு கூட்ட அரங்கங்கள் தலா 3 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் நிறுவப்படும்.**

**4.** வனப்பகுதியில் உள்ள இச்சாலைகளை பராமரித்து, மேம்படுத்த வரும் ஆண்டுகளில் **200** கோடி ரூபாய் செலவிட

உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில், **நடப்பாண்டில் 577 கி.மீ. நீளமுள்ள வனச் சாலைகளை மேம்படுத்திட 57.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**5.** வன வளங்களை பாதுகாக்க தமிழ்நாடு வனத் துறையில் **1,119** வேட்டைத் தடுப்பு காவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் வனப்பகுதிக்குள் வாழ்வதால், பெரும்பாலும் மலைவாழ் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதோடு மட்டுமின்றி, அடர்ந்த வனப்பகுதியை நன்கு அறிந்துள்ளதன் காரணத்தால், வனப்பகுதிகளில் வன மரங்கள் திருட்டு, வேட்டையாடுதல், நக்சல்பாரிகள் ஊடுருவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதால் வன வளத்தையும் வன உயிரினங்களையும் பாதுகாப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

இப்பணியாளர்கள் வனத்திற்குள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வனவளங்களை காக்கும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு, பணிபுரிந்து வருவதால் அவர்களுக்கு வழங்கப்படும் **மாதாந்திர தொகுப்பூதியம் 10,000 ரூபாயிலிருந்து 12,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## சுற்றுச்சூழல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

சென்னை மாநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக கடந்த ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவின்படி, சென்னை சேத்துப்பட்டு ஏரி, ஆவடி பருத்திப்பட்டு ஏரி மற்றும் மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரிகள் மறுசீரமைக்கப்பட்டன.

தற்போது அப்பகுதி மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையை ஏற்று, நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்தில் உள்ள சிட்லபாக்கம் ஏரியில் சூழல் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**219** ஏக்கர் விவசாய நிலங்களை ஆயக்கட்டு பரப்பாகக் கொண்டது சிட்லபாக்கம் ஏரி. ஆனால், தற்போது அந்த ஏரி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த **சிட்லபாக்கம் ஏரியை சீரமைக்கும் பொருட்டு,** ஆக்கிரமிப்பை அகற்றுதல், மண்திட்டுகளால் குறைந்துள்ள நீரின் கொள்ளளவினை அதன் உச்ச கொள்ளளவிற்கு மீளச் செய்தல், ஏரிக்கரையினை பலப்படுத்துதல், உபரி நீர் வீணாவதை தவிர்த்தல், உபரிநீர் தடுப்புச்சுவர் வசதிகளை மீண்டும் ஏற்படுத்துதல், வெள்ள நீரை

வடிகால்கள் மூலமாக திருப்புதல், கழிவுநீரை தடுப்பாண்களை ஏற்படுத்தி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு திருப்புதல் போன்ற **பணிகள் 25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**